தெரிவித்த காரணத்தினாலேயும் இந்த நடவடிக்கைகளைக் கண்டித்து, ஜனநாயகப் படுகொலைச் செயலை கண்டித்து நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்.)

4. கவன ஈர்ப்பு

மதுரை மற்றும் திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டங்களில் பருத்தி செடிகள் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் என். பழனிவேல், நா. இராமகிருஷ்ணன், எல். மூக்கையா, பெ. ஆசையன், திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள், பி. என். வல்லரசு, கோ. வீரையன், எம். அண்ணாமலை ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்பு கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டுவருவார்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''மதுரை மற்றும் திண்டுக்கல்—காயிதேமில்லத் மாவட்டங்களில் சாகுபடி செய்யப்பட்ட பருத்திச் செடிகள் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

தற்போது தமிழ்நாட்டில் மதுரைமாவட்டத்தில் சுமார் 11,350 ஹெக்டேர் பரப்பிலும், திண்டுக்கல்—காயிதேமில்லத் மாவட்டத்தில் சுமார் 25 ஹெக்டேர் பரப்பிலும், காமராஜர் மாவட்டத்தில் 2,447 ஹெக்டேர் பரப்பிலும், கோவை மாவட்டத்தில் 2,000 ஹெக்டேர் பரப்பிலும், சேலம் மாவட்டத்தில் 100 ஹெக்டேர் பரப்பிலும், ''ஹிலியோதிஸ்'' என்னும் காய்ப்புழுவின் தாக்குதல் பருத்திப் பயிரில் தோன்றி உள்ளது. மதுரை மாவட்டத்தில், உத்தமபாளையம், பெரியகுளம், உசிலம்பட்டி பகுதிகளிலும், திண்டுக்கல்–காயிதேமில்லத் மாவட்டத்தில் நிலக்கோட்டை பகுதிகளிலும், காமராஜர் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிப்புத்தூர் மற்றும் சாத்தூர் ஆகிய பகுதிகளிலும், கோவை மாவட்டத்தில் உடுமலைப்பேட்டை பகுதிகளிலும், சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் பகுதிகளிலும் இப்பூச்சியின் தாக்குதல் உள்ளது.

தேவைக்கு அதிகமாக தண்ணீர் பாய்ச்சுதல் அளவுக்கு அதிகமாக தழைச்சத்து உரமிடுதல் மற்றும் போதிய இடைவெளி இல்லாமல் பருத்தி பயிர் செய்தல் ஆகியவை ''ஹிலியோதிஸ்'' பூச்சி தாக்குதலுக்கு முக்கிய காரணங்களாகும். இப்பூச்சி தாக்குதல் வந்த பிறகு பருத்திச் செடிகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிறது. இப்பூச்சி தாக்குதல் வந்த பிறகும் எந்த மருந்து அடித்தாலும் பூச்சியை கட்டுப்படுத்த முடியாமல் போய்விடுகிறது. வியாபார நோக்கத்தோடு வியாபாரிகளால் விளம்பரம் செய்யப்பட்ட செயற்கை பைராத்திராய்டு மருந்தினை விவசாயிகள் பலமுறை உபயோகப்படுத்துவதால் பருத்தி செடிகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன.

இப்பூச்சியைக் கட்டுப்படுத்த கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:—

1. பருத்தி சாகுபடி செய்யப்பட்ட அனைத்து கிராமங்களிலும், மாலைக் கூட்டங்கள் மற்றும் முனைப்பு இயக்கங்கள் நடத்தி ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு தொழில் நுட்பங்கள் பரிந்துரைக்கப்படுகிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பூச்சியியல் வல்லுநர்களுடன், பூச்சி தாக்கிய பகுதிகள் ஆய்வு செய்யப்பட்டு அவ்வப்போது ஆலோசனைகள் வழங்கப்படுகிறது.

2. தாய்..அந்துப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த விளக்குப் பொறி மற்றும் இன ஈர்ப்புப்பொறி அமைக்கப்பட்டுள்ளது.

3. பைராத்திராய்டு மருந்து அடிக்கடி அடிப்பதன் தீமைகள் கிராமத்தில் நேரடியாகவும், சுவரொட்டிகள் மூலமாகவும் விவசாயிகளுக்கு தெரியப்படுத்தப்படுகிறது.

4. தாக்குதல் அதிகமாக இருக்கும் பகுதிகளில், தழைச்சத்து அதிகமாக இடுவது தவிர்க்கப்படுவதுடன், தண்ணீரை அடிக்கடி பாய்ச்சாமலும், தேவைக்கேற்ப பாய்ச்சும்படியும் பரிந்துரை செய்யப்படுகின்றன.

5. புழுக்களால் தாக்கப்பட்ட பூ, மொட்டு மற்றும் பிஞ்சுகள் சேகரித்து அழிக்கப்படுவதுடன், முனைப்பு இயக்கங்களின் மூலம் புழுக்கள் கையினால் சேகரிக்கப்பட்டு அழிக்கப்படுகின்றன.

6. எண்டோசல்பான், குளோரிபைரிபாஸ், பாசலோன் மற்றும் மானோ குரோட்டோபாஸ் ஆகிய மருந்துகளில் ஏதேனும் ஒன்று பரிந்துரைக்கப்பட்ட அளவில் தெளிக்கப்படுகிறது. இம்மருந்துடன் வேப்பெண்ணெயும் கலந்து தெளிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

7 இப்புழுக்களைக் கட்டுப்படுத்த ''என்.பி' வைரஸ் N. P. Virus திரவம் தெளிக்கப்படுகிறது. மதுரை மாவட்டத்தில் 850) ஹெக்டேருக்குத் தேவையான என். பி. வைரஸ் திரவம் உற்பத்தி செய்யப்பட்டு தெளிக்கப்பட்டது.

8. செய்தித்தாள்கள், துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள், மற்றும் வானொலி மூலம் இப்பூச்சியைக் கட்டுப்படுத்தும் முறைகளை விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

9. தரமான பூச்சி மருந்துகள் மட்டுமே விவசாயிகளுக்கு கிடைக்க தரக்கட்டுப்பாடு நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன.

10. தீவிர பருத்தி சாகுபடிச் திட்டத்தின்கீழ் பூச்சி மருந்துகள் விவசாயிகளுக்கு 25 சத மானியத்தில் வழங்கப் படுகிறது. மதுரை மாவட்டத்திற்கு ரூ. 1·60 இலட்சமும், திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்திற்கு ரூ. 0.25 இலட்சமும் காமராஜர் மாவட்டத்திற்கு ரூ. 1.70 இலட்சமும், கோவை மாவட்டத்திற்கு ரூ. 0.75 இலட்சமும், சேலம் மாவட்டத்திற்கு ரூ. 0.75 இலட்சமும் மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

11. ஜனவரி மாத முதல் வாரத்தில் தொடர்ந்து பெய்த மழையும், பருத்தி பிஞ்சு, காய்கள், பூக்கள் உதிர காரணமாகவும் அமைந்து விட்டது.

பருத்தி பயிரில் தேன் ஒழுகல் நோய் தாக்குதல் ஏதும் காணப்படவில்லை.

ஹிலியோதிஸ் என்னும் பருத்தி காய்புழுவின் தாக்குதலின் தன்மை ஒரே அளவாக இல்லை. சில வயல்களில் தாக்குதல் கடுமையாகவும், சில வயல்களில் மிதமாகவும் உள்ளது. பாதிக்கப்பட்ட பருத்திப்பயிர் காய் உருவாகும் பருவம் முதல் காய் வெடிக்கும் பருவம் வரை உள்ளது. இக்காய்ப்புழுவின் தாக்குதலினால் ஒரு ஹெக்டேருக்கு சுமார் 1 முதல் 3 குவிண்டால் வரை உற்பத்தி இழப்பு ஏற்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. பருத்தி பயிரில் நோய் தாக்குதல் ஏதும் காணப்படவில்லை. ஹிலியோதிஸ் என்னும் காய்ப்புழுவின் தாக்குதல் மட்டுமே மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் தோன்றியுள்ளது. இந்த பாதிப்பினால் விவசாயிகளுக்கு முழு நஷ்டம் ஏற்பட வாய்ப்பில்லை.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பருத்திச் செடிகள் குறிப்பாக மதுரை மாவட்டத்தில் பெரிய அளவிலே காய்ப்புழுவினால் பாதிக்கப்பட்டு அந்த வட்டாரத்து மக்கள் மிகப் பெரிய கஷ்டத்தை இப்போது எதிர்நோக்கி இருக்கின்றார்கள். நான் இரண்டு நாட்களுக்கு முன்னால் அங்கே சென்றிருந்தபோது 50 ஆயிரம் ஏக்கருக்கு மேல் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இங்கே இந்த அறிக்கையிலே 11,300 ஹெக்டேர் மதுரை மாவட்டத்தில் மட்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் ஆண்டிப்பட்டி பகுதியில் மட்டும் 50 ஆயிரம் ஹெக்டேர் பாதிக்கப்பட்டிருப்பதாக அங்குள்ளவர்கள் சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு வினா மட்டும் கேட்க வேண்டும், இது சொற்பொழிவல்ல.

9.30 மணி

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முக்கியமான விஷயம், தாங்கள் என்னைச் சொல்ல அனுமதிக்க வேண்டும். அரை மணி நேரத்தை வீண் பண்ணிவிட்டீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் வீண் பண்ணினேனா? இது என்ன பேச்சு? ஒரு வினா என்றால் மட்டும் அனுமதிக்கிறேன்.

திரு. என். பழனிவேல்: ஒரு வினாதான். இப்போது 50 கோடி ரூபாய்க்கு மேல் மதுரை மாவட்டத்தில் மட்டும் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அதுபோல பல மாவட்டங்களில் எம்.சி.யூ.5 மற்றும் எல்.ஆர்.ஏ. 5166 ரக பருத்திகளைப் பயிரிட்டதால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். வேளாண்மைத் துறை அதிகாரிகளின் சரியான வழிக்காட்டுதல் விவசாயிகளுக்கு இல்லாததால்தான் இந்த பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தலைவர் அவர்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்வதெல்லாம் இது குறித்து உரிய நடவடிக்கை எடுப்பதோடு எதிர்காலத்தில் அந்த விவசாயிகளுக்குச் சரியான வழிகாட்டுதலை ஏற்படுத்தித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹிலியோதிஸ் என்னும் காய்ப்புழுவின் தாக்குதல் என்று சொன்னால், பைரித்திராய்டு என்ற மருந்தை தெளிப்பதன் மூலம், அதுவும் அடிக்கடி அந்த மருந்தை பயன்படுத்துவதன் மூலம் ஏற்படுகின்ற புழுக்களைத் தடுக்க இயலாது என்று வேளாண்மைத் துறை, விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துச்சொல்லியிருக்கிறது. ஆனால் இந்த பைரித்திராய்டு என்ற மருந்தை விவசாயிகள் ஒரு முறை அல்ல, இரண்டு முறை அல்ல, மூன்று முறை தொடர்ந்து அடித்துவிடுகிற காரணத்தால் காய்ப்புழு நோய் வருவதை எதிர்த்துத் தாக்குகின்ற அந்தப் பூச்சிகள் எல்லாம் செத்துவிடுகின்றன. அதனால் இந்தப் புழு உற்பத்தியாகிறபோது எந்த மருந்தைச் தெளித்தாலும் அந்தப்புழுக்கள் சாகாமல் இந்தச் சேதத்தை ஏற்படுத்துகின்றன. இதைப்பற்றி நம்முடைய வேளண்மைத் துறை இந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகளுக்கு தீவிரமாக எடுத்துக்சொல்லி இப்போது கட்டுப்படுத்தியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும் பூச்சி மருந்து, விவசாயிகளுக்கு 25 சதவிகிதம் மானியத்தில் வழங்கப்படுகிறது. மதுரை மாவட்டத்தில் 1.60 லட்சமும், திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தில் 0.25 லட்சமும், காமராசர் மாவட்டத்தில் 1.70 லட்சமும், கோவை

மாவட்டத்தில் 0.75 லட்சமும், சேலம் மாவட்டத்தில் 0.75 லட்சமும் மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மேலும் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மூலமாக விஞ்ஞானிகளைக் கொண்டும் அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயிகளுக்குத் தொடர்ந்து உதவிகளைச் செய்து இப்போது அந்தப் புழுக்களை அழிப்பதில், கட்டுப் படுத்துவதில் ஈடுபட்டிருக்கிறோம். அந்த வகையில் புழுக்களைக் கட்டுப்படுத்தியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எல். மூக்கையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் பெரிய குளம், ஆண்டிப்பட்டி, தேனி போன்ற சட்டமன்றத் தொகுதிகள் அடங்கிய பகுதிகளில் ஏராளமான ஏக்கர் நிலங்களில் விவசாயிகள் பருத்தி பயிர் செய்து ஹிலியோதிஸ் என்னும் காய்ப்புழுவின் தாக்குதல் ஏற்பட்டு பெருத்த நஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசு ஏதாவது நிவாரண உதவி வழங்க இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு அந்தப் புழுக்களை அழிப்பதற்கு வேளாண்மைத் துறையும், வேளாண்மைப் பல்கலைக் கழகத்தினுடைய விஞ்ஞானிகளும் எல்லாவிதமான உதவிகளையும் செய்து வருகிறார்கள். பாதிக்கப்பட்ட விவசாயி களுக்கு நட்டஈடு என்ற அடிப்படையில் ஏதும் இப்போது வழங்குவதற்கு அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பொதுக் கணக்குக் குழுவினுடைய அறிக்கையை அளித்தல். திரு.மு. இராமநாதன்.

திரு.என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது ஒரு கேள்வி கேட்க அனுமதிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரே பிரச்சினை குறித்து இரண்டுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் எழுப்பினால் ஆளுக்கு ஒரு கேள்விதான்.

5. அறிக்கை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு.

9.35 மணி

திரு. மு. இராமநாதன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவினுடைய தலைவர் திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் சார்பாக 1989–90ஆம் ஆண்டுக்கான மேற்படி குழுவின் 18 முதல் 22 வரையிலான 9–வது சட்டமன்றப் பேரவையினுடைய அறிக்கையை இந்த அவைக்கு அளிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதமும் பதிலுரையும்—தொடர்ச்சி....

4. கவன ஈர்ப்பு-தொடர்ச்சி

மதுரை மற்றும் திண்டுக்கல்-காயிதேமில்லத் மாவட்டங்களில் பருத்தி செடிகள் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து—தொடர்ச்சி.

திரு.கே. ரமணி: தலைவர் அவர்களே, முதலில் கேள்வி போட்டவரே இரண்டு கேள்வி போடுவதற்கு உரிமை இல்லை என்கிறீர்கள். மற்றவர்கள் எல்லாம் கேட்கிறார்கள். ஒரு கேள்வியாவது மற்றவர்கள் கூடப் போடவில்லை என்று சொன்னால் எப்படி இருக்கும் என்று. அது ஒரு most important item.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருப்பது 6 பேர் அல்லது 7 பேர். அப்படி இருக்கும்போது இரண்டு கேள்வி கொடுத்தால் 14 தடவை கொடுக்க வேண்டியது இருக்கும்.

திரு. கே. ரமணி: அப்போதுதான் கஷ்டம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி இது வரைக்கும் முன்னாலே கொடுத்து இருக்கிறோமா என்று சொல்லுங்கள். (குறுக்கீடு) மொத்தத்தில் 2. அதாவது ஒருவர் கேட்டால் 2 வினா, இருவர் கேட்டால் ஒரு வினா, அவ்வளவுதான்.

திரு. கே. ரமணி: அதிலே இருக்கிற உறுப்பினர்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 7 பேர் இருக்கிறார்கள்,

திரு. கே. ரமணி: கட்சிக்கு ஒரு ஆளாவது கொடுக்கலாமா, இல்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொடுத்துக்கொண்டு இருக்க வேண்டுமென்றால் கொடுக்கலாம். நீங்கள் எல்லோரும் ஒத்துக்கொண்டால் சரிதான். அதிலே எனக்கு ஒன்றும் ஒரு வேறு கருத்து இல்லை. சில வினாக்களை 10 பேர், 12 பேர் கேட்கிறார்கள். அப்படியானால் 12 பேருக்கும் கொடுக்க வேண்டுமென்றாலும் கொடுத்து விடுகிறேன்; எனக்கு ஒன்றுமில்லை; நேரத்தை இழுத்துக்கொண்டு போவதில் எனக்கு இழப்பு ஒன்றும் இல்லை.

திரு. கே. ரமணி: தலைவர் அவர்களே, நான் ஒருவிதமான விதிமுறைகளுக்கு உட்பட்டுச் சொல்கிறேன். இன்றைக்கு நாங்கள் கேள்வி நேரத்தையே இழந்து நிற்கிறோம். அந்த நேரம் இன்றைக்குப் போய்விட்டது. ஒரு பொது சப்ஜெக்ட் மாதிரி விவாதம் நடந்தது. எங்களுக்கு இருக்கிறது

1990 சனவரி 24] *[திரு. கே. ரமணி]*

எங்கு வளைவு போடலாம், எங்கு போஸ்டர் போடலாம், எங்கே மேடை போடலாம் என்பது பற்றி எல்லாம் எங்களுக்கும் பிரச்சினை இருக்கிறது, எங்கள் ஊர்களிலே இருக்கிற போலீசாருக்கும், எங்களுக்கும் பிரச்சினை இருக்கிறது. ஆனால் இந்த காரியத்தைப் பேச இந்தச் சபையின் இந்த நேரத்தை அதற்காகச் செலவழிக்க முடியாது. அதுபற்றி பேசுவதற்கு நீங்களே ஒரு தகுந்த பாதுகாப்பை எங்களுக்குத் தர வேண்டியவர்கள். எங்கள் கேள்வி நேரத்தை சேக்ரிஃபைஸ் பண்ணி இருக்கிறோம். எனவே ஆளுக்கு ஒரு கேள்வியாவது, கட்சிக்கு ஒரு ஆளாவது கேட்பதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கட்சிக்கு ஒரு உறுப்பினர் என்றால், இருக்கிற எல்லோருக்கும் ஆளுக்கு ஒரு வினா கொடுக்கிறேன் திரு.நா. இராமகிருஷ்ணன் (இருக்கையில் இல்லை). திரு. பெ. ஆசையன் (இருக்கையில் இல்லை) திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் (இருக்கையில் இல்லை). திரு. பி. என்.வல்லரசு (இருக்கையில் இல்லை). திரு. கோ. வீரையன்.

திரு.கோ.வீரையன்: மாண்புமிகு தலைவர் அவர்களே,.... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வளவுதான். திரு. என். பழனிவேல் நீங்கள் பேச முடியாது. ஆளுக்கு ஒன்றுதான்.

திரு.கே.ரமணி: தலைவர் அவர்களே, கவன ஈர்ப்பு என்பது ரொம்பவும் முக்கியமானது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த இடத்திலே திரு. ரமணி அவர்களை நான் கேட்க விரும்புவது, ஒரு கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் அனுமதிக்க வேண்டுமென்று சொல்கிறீர்களா அல்லது ஒவ்வொருவருக்கும் ஒரு வினா கொடுக்க வேண்டுமா?

திரு. என். பழனிவேல்: இரண்டாவது வினா அனுமதிப்பது வழக்கமாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. உட்காருங்கள். ஒருவர் கேட்டால்தான் இரண்டாவது வினா அனுமதிப்பது என்பது ஏற்கெனவே இருக்கிற விதி. பலர் கேட்டால் ஒரு கட்சிக்கு ஒருவர். (குறுக்கீடு) உங்கள் தலைவரைச் சொல்லச் சொல்லுங்கள். திரு. கே. ரமணி அவர்கள் எனக்கு ஒரு விளக்கம் சொல்ல வேண்டும். ஒரு கட்சிக்கு ஒருவரா அல்லது ஒவ்வொருவருக்கும் ஒரு வினாவா?

திரு.கே.ரமணி: இங்கே வழக்கத்திலே, பட்டியலில், ரொம்ப அதிகப்படியான 10 பேர் அல்லது 15 பேர் இருந்தால்

கட்சிக்கு ஒருவர் என்று கொடுத்து கூட முடிப்பது உண்டு. மற்றது உங்களுடைய உசிதம். உங்களுக்கு நேரம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய உசிதம் வேண்டாம். இப்போது நீங்களே சொல்லுங்கள். ஒரு கட்சிக்கு ஒருவரா? அல்லது எல்லோருக்குமே ஆளுக்கு ஒன்று, ஒன்றா என்பதைச் சொல்லுங்கள்.

திரு. கே. ரமணி: நான் இப்போது கட்சிக்கு ஒருவரையாவது பேச அனுமதி கொடுங்கள் என்று சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியானால் திரு. பழனிவேலோடு முடிந்து போய்விட்டது. திரு. வீரையனுக்கும் திரு. அண்ணாமலைக்கும் வாய்ப்பு வராது என்பதைத் தெரிவிக்கிறேன்.

திரு. கே. ரமணி: இது இப்போது நாம் பேசியபோது உருவான முடிவு. அதற்கு முன்னால் உருவாகவில்லை. அதற்கு தயவுசெய்து நீங்கள் திரு. வீரையனைக் கட்டுப்படுத்த வேண்டாம். அவர் ஒரு விவசாய இயக்கத்தின் தலைவர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை இல்லை. அது எனக்குத் தெரியும். (குறுக்கீடு) நீங்கள் அதைத்தான் சொல்லுங்கள் என்று சொன்னேன். ஒரு கட்சிக்கு ஒருவர் என்று சொன்னீர்கள் என்று சொன்னால் இந்த விதி முறைதான் வரும். அல்லது ஆளுக்கு ஒன்று என்று சொல்லுங்கள்: அப்படி வாய்ப்பு கொடுத்து விடலாம்.

திரு. கே. ரமணி: Mr. Speaker Sir, if mechanically arguing We cannot settle the matter. இப்போது நாம் இங்கே பேசித் தானே முடிவு எடுத்தோம். இங்கே பேசி, நான் சொல்லி, நீங்கள் முடிவுக்கு வந்தீர்கள். அதற்கு முன்னால் அவர் அதை எதிர்பார்க்கவில்லையே. அவர் ஒரு விவசாய சங்கத் தலைவர். தமிழ்நாடு முழுவதும் இருக்கிற விஷயங்களைத் தெரிந்தவர். அவர் ஒரு கேள்வி கேட்க வேண்டி இருக்கிறது. What is wrong in it Which rule will be broken? Please tell me.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை நான் எழுப்பவில்லை. இப்போது திரு. வீரையனை நான் அனுமதிக்கிறேன், ஆனால் திரு. ரமணி அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டியது, நீங்கள்தான் ஒரு கட்சிக்கு ஒருவருக்குக் கொடுங்கள் என்று சொன்னீர்கள். அதனால்தான் நான் திருப்பி உங்களைக் கேட்டேன். இல்லாவிட்டால் நானே ஒவ்வொருவரையும் அனுமதித்து இருப்பேன்.

திரு. கே. ரமணி: Speaker Sir, நான் சொன்னதிலே There is no contradiction நான் சொன்னது Circumstances சூழ்நிலைகள் பிரச்சினை, ஆள், இடம் இத்தனையையும் நீங்கள் பார்க்க வேண்டும். நாமே பேசி இதற்கு ஏற்பாடு பண்ணலாம்.

1990 சனவரி 24]

(9–40 மணி)

திரு.கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே தரப்பட்டிருக்கிற விவர அறிக்கையில் சில மாவட்டங்கள் குறிப்பிடப்பட்டிருந்தாலும், இவற்றைவிடக் கூடுதலான மாவட்டங்களிலே கிட்டத்தட்ட 7 மாவட்டங்களிலே, பருத்திப்பயிர் முழுவதுமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. விவர அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பது. 1 முதல் 3 குவிண்டால் வரை ஹெக்டேருக்கு பருத்தி உற்பத்தி குறைவாக இருக்கும் என்று. ஆனால் நான் 21ஆம் தேதி ஆண்டிப்பட்டிக்கும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் போய் வயல்களைப் பார்த்தேன். அங்கெல்லாம் ஹெக்டேருக்கு 1 முதல் 3 குவிண்டால் வரை கிடைப்பதே அரிதாக இருக்கிறது. அப்படிப்பட்ட மிகப் பெரிய பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது. ரூ. 5000 வரை விவசாயிகள் செலவழித்தபின்னரும் நஷ்டப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய வேண்டுகோள் சம்பந்தப்பட்ட நிலத்தினுடைய நிலவரி தள்ளுபடி செய்யப்பட வேண்டும். அதற்காக கொடுக்கப்பட்டிருக்கும் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட வேண்டும். மின் கட்டணம் ரத்து செய்யப்பட வேண்டும் என்பனவாகும். பாதிப்புக்குரிய நிவாரணம் அரசால் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று கோருகிறார்கள். அவர்களின் கோரிக்கை மனுக்களையெல்லாம் வேளாண்மைத் துறை அமைச்சரிடம் ஒரு கட்டாகக் கட்டி கொண்டு போய் கொடுத்திருக்கிறேன். பஞ்சாப் மற்றும் ஆந்திரா போன்ற மாநிலங்களில் இப்படிப்பட்ட நஷ்டஈட்டை முன்னாலேயே வழங்கியிருக்கிறார்கள். அதையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிபந்தனை—இந்த ஒரு கேள்வியோடு நிறுத்திக் கொள்வதாக இருந்தால் இவை எல்லாம் பரிசீலிக்கப்படும். (சிரிப்பு)

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தினைப் பொறுத்தவரையில் அங்கே உள்ள பருத்தி விவசாயிகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். மேலும் பருத்திக்கு ஏற்பட்ட நோயினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் விவசாய அலுவலர்கள் மூலமாகப் பரிந்துரை செய்யப்பட்ட மருந்தை அடித்ததன் விளைவாகத்தான் இந்த அளவுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டது என்கிறார்கள். இந்த ஆண்டைப்போல் வேறு எந்த ஆண்டிலும் இல்லை. உதாரணமாக தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் பருத்தி ஒரு லாபகரமான தொழிலாக இருந்து வந்தது. ஏக்கர் ஒன்றிக்கு 7 முதல் 10 குவிண்டால் உற்பத்தியாகக் கூடிய பருத்தி இந்த ஆண்டு $1\frac{1}{2}$ முதல் 2 குவிண்டால் அளவுக்குத்தான் உற்பத்தி வந்திருக்கிறது. மேலும் விதை, உரம், மருந்துக்கு மட்டும்

ரூ. 2,000 செலவாகியிருக்கிறது. தண்ணீர் மற்றும் முட்டு வழிச் செலவு எல்லாமாக ஏக்கருக்கு ரூ. 4,000 சராசரியாக செலவாகி யிருக்கிறது. பெருவாரியான நிலத்தில் இந்த ஆண்டு சாகுபடி செய்யமுடியவில்லை. எனவே இத்தகைய பாதிப்புக்கு உள் ளான விவசாயிகளுக்கு இந்த அரசு நிச்சயமாக அவர்களின் கோரிக்கைகளைப் பரிசீலித்து நிவாரணம் அளிக்க வேண்டும். இல்லாவிட்டால் விவசாயிகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாவார்கள் என்பதைத் தெரிவித்து அவர்களுக்கு அரசு நிவாரணம் அளிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சே. ஆறுமுகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, விவசாயிகள் நெல் அல்லது பருத்தி அல்லது கரும்பு என்று ஒவ்வொரு பயிராக ஒவ்வொரு காலத் திலும் பயிர் செய்கிறார்கள். சில நேரங்களிலே பூச்சிகளாலும் பயிர் பாதிப்பு ஏற்படுகிறது. மழை இல்லாமலும் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். சில நேரங்களில் திடீரென்று விலை குறைவதாலும் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். அதற்கெல்லாம் நாம் நிவாரணம் அளிப்பது என்ற ஒரு நடைமுறையை மேற்கொண்டால் அதற்கு எல்லையே இருக்காது. ஆனால் இந்தப் பருத்தி சாகுபடியைப் பொறுத்தவரையில் இது காய்ப்புழுவினால் ஏற்பட்டது. எனவே இந்த பெரும் பாதிப்பைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி எப்படிப்பட்ட நிவாரணம் அளிக்கலாம் என்பதைப் பற்றி அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

6. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் — விவாதம் —தொடர்ச்சி.

திரு. ஒய். வெங்கடேஸ்வர திட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத் தின் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு கொடுத்ததற்காக மிகவும் நன்றி.

ஆளுநர் உரையானது ஆளும் கட்சியினுடைய வருங்கால திட்டங்களைச் சொல்வதாகும். இந்த அரசாங்கத்திடம் அதற் காக என்னென்ன திட்டங்கள் இருக்கின்றனவோ அவற்றை யெல்லாம் சரியான முறையில் இங்கே உரையில் குறிப்பிட் டிருக்கிறார்கள். இங்கே இந்த ஆட்சி வந்து 1 வருஷ கால மாகிறது. இங்கே கலைஞர் அவர்களுடைய ஆட்சி நடந்து வந்த போதிலும் மத்தியிலே தேசிய முன்னணியின் ஆட்சி ஏற்பட்டிருக்கிறது. அந்த ஆட்சி ஏற்பட்ட உடனே பண்டங்களின் விலை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைய ஆரம்பித்திருக்கிறது. அதே மாதிரி ஷேர் மார்க்கெட் விலையும் கூட குறைந்திருக் கிறது.